بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுயுல்லாஹுயுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *14/06/2024* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

- **பனூ நஸீர் போருடைய சூழ்நிலைகள், சம்பவங்கள் பற்றிய குறிப்பு**
- **பாக்கிஸ்தானிய அஹ்மதிகளுக்காக துஆ செய்யுமாறு கவனமூட்டல்**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

நான் இன்று பனூ நஸீர் போரைப் பற்றி கொஞ்சம் குறிப்பிடுவேன். பனூ நஸீர், மதீனாவின் ஒரு யூத குடும்பம் ஆகும். சில வரலாற்றாசிரியர்கள், பனூ நஸீர் கைபருடைய யூத கோத்திரமாகும் என்று எழுதியிருக்கிறார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனா சென்ற போது அந்நேரத்தில் பனூ நஸீருடைய தலைவராக ஹுயய் பின் அக்தப் என்பவர் இருந்தார். உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் சஃபிய்யா (ரலி) அவர்கள் இத்தலைவருடைய மகளாக இருந்தார்கள். ஹுயய் பின் அக்தப் உடைய பரம்பரை ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் சகோதரரான ஹஸ்ரத் ஹாரூன் (அலை) அவர்களை சென்றடைகிறது என்று கூறப்படுகிறது. அதே போன்று, ஹுயய் பின் அக்தப் உடைய மூதாதையர்களில் பல பேர் நபிமார்களாக ஆகும் நற்பேறு பெற்றிருந்தார்கள். அதனால் அவருக்கு பெரும் ஆணவம் இருந்தது. அல்லாஹ் எங்கள் மீது இவ்வுலகிலும் பேரருள் செய்துள்ளான். மறுமையிலும் அவன் எங்கள் மீது பேரருள் செய்வான். பாவங்களின் காரணமாக அவன் எங்களுக்கு சில நாட்கள் (மட்டுமே) தண்டனை அளிப்பான். இறுதியில் சுவர்க்கமே எங்களுடைய தங்குமிடமாக இருக்கும் என்று கூறி வந்தார். இந்த குலப் பெருமை காரணமாக ஹுயய், பெருமானார் (ஸல்) அவர்களின் போதனையை விட்டு முகம் திருப்பிக் கொண்டார். பனூ நஸீர் கோத்திரம் குபா பள்ளிவாசலில் இருந்து பாதி மைல் தூரத்தில் இருந்தது.

பனூ நஸீர் போர் ஹிஜ்ரீ **4** ஆம் ஆண்டு ரபீவுல் அவ்வல் மாதத்தில் நிகழ்ந்தது. உஹுது போருக்கு முன்பு நிகழ்ந்ததாகவும் ஒரு கூற்று உள்ளது.

**பனூ நஸீர் போருக்கான காரணத்தைக் குறித்து கூறப்பட்டுள்ளதாவது;** மக்கத்து குரைஷியர்கள் பத்ர் போருக்கு முன்பு அப்துல்லாஹ் பின் உபய் பின் சலூல் மற்றும் அவ்ஸ், கஸ்ரஜ் (ஆகிய கோத்திரங்களி)ன் இதர சிலை வணங்கிகளுக்கு கடிதம் எழுதினார்கள். அந்த கடிதத்தில், நீங்கள் எங்களது தோழருக்கு அதாவது, முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளீர்கள். நாங்கள் சத்தியமிட்டு கூறுவதென்னவென்றால், நீங்கள் அவர்களுடன் போரிடுங்கள் அல்லது அவர்களை உங்களது நகரத்திலிருந்து வெளியேற்றி விடுங்கள் அல்லது நாங்கள் அரேபியர்களை ஒன்று திரட்டி உங்கள் மீது தாக்குதல் தொடுப்போம் என்று எழுதியிருந்தார்கள். உபய் பின் சலூல் மற்றும் இதர சிலை வணங்கிகளுக்கு இந்த கடிதம் கிடைக்கப் பெற்றபோது அவர்கள் ஒருவர் மற்றவர்களுக்கு செய்தி அனுப்பிக் கொண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுடன் போர் செய்வது என்று உறுதியான எண்ணம் கொண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இது பற்றிய தகவல்

கிடைத்தபோது அன்னார் சஹாபிகளின் ஒரு குழுவை அழைத்துக் கொண்டு அவர்களை சந்தித்தார்கள். குரைஷியர்கள் உங்களுக்கு கடும் மிரட்டல் விடுத்து கடிதம் எழுதி இருக்கிறார்கள். அந்தக் கடிதம் உங்களை எந்தவோர் ஏமாற்றத்திலும் ஆழ்த்தி விட வேண்டாம். நீங்கள் உங்களுடைய சகோதரர்களுக்கெதிராகவும் மகன்களுக்கெதிராகவும் சண்டையிட்டு விட வேண்டாம் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் இவ்விஷயம் அந்த தலைவர்களுக்கு புரிந்தது. அவர்கள் தம் எண்ணத்தை தள்ளி வைத்துக் கொண்டனர்.

குரைஷியர்கள் பத்ர் போருக்கு பிறகு யூதர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அதில், உங்களிடத்தில் ஆயுதங்கள் உள்ளன; நீங்கள் கோட்டைகளின் எஜமானர்கள் ஆவீர்கள். ஒன்று, நீங்கள் எங்களுடைய தோழருடன் போரிடுங்கள். இல்லை என்றால் நாங்கள் உங்கள் மீது போர் தொடுப்போம் என்று எழுதியிருந்தார்கள். இந்தக் கடிதம் யூதர்களை வந்தடைந்த போது பெருமானார் (ஸல்) அவர்களுடன் மோசடி செய்யலாம் என்பதில் பனூ நஸீர் பொருந்திக் கொண்டார்கள். ஆகவே அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில், தாங்கள் முப்பது தோழர்களுடன் எங்களிடம் வருகை தாருங்கள். எங்களுடைய முப்பது ஆலிம்களும் வருவார்கள். அவர்கள் தங்களை உண்மைப்படுத்தினார்கள் என்றால், தங்கள் மீது நம்பிக்கை கொண்டார்கள் என்றால் நாங்களும் தங்கள் மீது நம்பிக்கை கொள்வோம் என்று செய்தி அனுப்பினர். அடுத்த நாள் பெருமானார் (ஸல்) அவர்கள் 30 தோழர்களை உடன் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். 30 யூத ஆலிம்களும் புறப்பட்டார்கள்.

யூதர்கள் திறந்த வெளியில் வந்தபோது அவர்கள் ஒருவர் மற்றவரிடம், நீங்கள் அவர்கள் மீது எப்படி தாக்குதல் தொடுப்பீர்கள்? அவர்களுடன் 30 தோழர்கள் இருக்கிறார்களே என்று பேசிக்கொண்டார்கள். எனவே யூதர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் தாங்கள் மூன்று தோழர்களை அழைத்து வாருங்கள்; நாங்களும் எங்களுடைய மூன்று ஆலிம்களை அழைத்து வருகிறோம் என்று செய்தி அனுப்பினர். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் மூன்று தோழர்களுடன் புறப்பட்டார்கள். மூன்று யூத ஆலிம்களும் புறப்பட்டார்கள். அவர்களிடத்தில் கத்தியும் இருந்தன. அவர்கள் பெருமானார் (ஸல்) மீது தாக்குதல் நடத்த விரும்பினர். ஆனால், நலம் விரும்பியாக இருந்த ஒரு யூத பெண் ஓர் அன்சாரி முஸ்லிமிடம் யூதர்களின் அனைத்து திட்டங்கள் குறித்தும் தகவல் தெரிவித்து விட்டார். ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் யூதர்களை சென்றடைவதற்கு முன்பே, அந்த நபர் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி யூதர்களுடைய நோக்கத்தை குறித்து அன்னாருக்கு தகவல் கூறிவிட்டார். (ஆகவே) அன்னார் மதீனாவுக்கு திரும்பி வந்து சஹாபிகளின் ஒரு குழுவை அழைத்துக் கொண்டு பனூ நஸீர் உடைய கோட்டைகளை நோக்கி புறப்பட்டார்கள். அங்கு சென்றடைந்ததும் அவர்களை முற்றுகையிட்டார்கள். பிறகு அவர்களுடைய தலைவர்களுக்கு, இவ்வாறான நிலை இருக்கும்போது நான் உங்களை மதீனாவில் இருக்க விட முடியாது. ஆகவே நீங்கள் மீண்டும் புதிய வகையில் என்னுடன் ஒப்பந்தம் செய்து, இனிமேல் நீங்கள் ஒப்பந்தத்தை முறிக்க மாட்டீர்கள் என்றும், மோசடி செய்ய மாட்டீர்கள் என்றும் எனக்கு நம்பிக்கையூட்டாதவரை நான் உங்களை மதீனாவில் வைத்திருக்க முடியாது என்று செய்தி அனுப்பினார்கள். ஆனால் யூதர்களோ ஒப்பந்தம் செய்வதை தெளிவாக மறுத்து விட்டார்கள். இவ்வாறு அந்தப் போர் ஆரம்பமானது.

**இந்தப் போருக்கான காரணங்களை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:** அம்ர் பின் உமய்யா ஸம்ரீ அவர்களை காஃபிர்கள் பிஃரு மஊனா சம்பவத்தின் போது கைது செய்து பிறகு விட்டு விட்டார்கள். அவர்கள் மதீனாவை நோக்கி திரும்பி வந்து கொண்டிருக்கும் போது வழியில் பனூ ஆமிர் கோத்திரத்தைச் சார்ந்த இரு நபர்களை சந்திக்கிறார்கள். அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் ஒப்பந்தம் செய்திருந்தார்கள். அம்ர் அவர்களுக்கு இந்த ஒப்பந்தம் குறித்து

எதுவும் தெரியாது. ஆகவே சந்தர்ப்பம் கிடைத்த உடனேயே அவர்கள் அந்த இரு நபர்களையும் கொன்று விட்டார்கள். பிஃரு மவூனாவின் ஷஹீதுகளுக்காக பழிவாங்கும் விதமாக அவர்களை கொன்றிருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்த விஷயங்கள் தெரியவந்த போது அன்னார் கடும் கோபமுற்றார்கள். ஆகவே கொல்லப்பட்ட அந்த இருவருடைய இரத்த இழப்பீட்டை அவர்களின் வாரிசுகளுக்கு அனுப்பி வைத்தார்கள். பனூ ஆமீரைச் சார்ந்த மக்கள் பனூ நஸீருக்கும் நட்புக் கோத்திரமாக இருந்தார்கள். பனூ நஸீர் முஸ்லிம்களுடைய நட்புக் கோத்திரமாக இருந்தார்கள். ஆகவே ஒப்பந்தத்தின் அடிப்படையில் அந்த இரத்த இழப்பீட்டிற்கான பங்கில் பனூ நஸீர் கோத்திரமும் பங்கெடுக்க வேண்டியதிருந்தது. ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் அதன் காரணமாக தம் சில தோழர்களுடன் பனூ நஸீர் குடியிருந்த பகுதியை சென்றடைந்தார்கள். அவர்களிடம் இரத்த இழப்பீட்டிற்கான பங்கை கேட்டார்கள். அந்த நாள் சனிக்கிழமையாக இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபிகளின் ஒரு குழுவுடன் சென்றிருந்தார்கள். அவர்களின் எண்ணிக்கை 10 -ஐ விடவும் குறைவாக இருந்தது என்று கூறப்படுகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் யூதர்களிடம் இழப்பீடு குறித்து பேசியபோது அவர்கள், நிச்சயமாக அபூ காசிம் அவர்களே! முதலில் தாங்கள் உணவு உண்ணுங்கள்; பிறகு தங்களுடைய விஷயத்தின் பக்கம் வருகிறோம் என்று கூறினார்கள். இவ்வாறு யூதர்கள் வெளிப்படையான முறையில் மிகவும் நல்ல விதமாக அன்னாருடன் பேசினார்கள். ஆனால் அதற்கு பின்னால் அன்னாரைக் கொலை செய்வதற்காக திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த யூத மக்களுடைய வீடுகளில் ஒரு வீட்டுச் சுவருக்கு அருகில் நிழலில் அமர்ந்திருந்தார்கள். வீட்டின் கூரை மேலிருந்து பெருமானார் (ஸல்) அவர்கள் மீது பெரும் பாறையை எறியலாம் என்று அவர்கள் ஆலோசனை செய்து கொண்டிருந்தார்கள்.

*மீதமுள்ள விபரங்களை வரும் காலத்தில் எடுத்துரைப்பதாக கூறியபிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பாகிஸ்தானிய அஹ்மதிகளுக்காக துஆ செய்யுமாறு கவனமூட்டியவாறு கூறினார்கள்:*

பாகிஸ்தானுடைய அஹ்மதிகள் மீது தற்போது மீண்டும் கடுமைகள் காட்டப்படுகின்றன. அல்லாஹ் வெகு விரைவில் பாகிஸ்தானிய அஹ்மதிகளுக்கும் அவர்களின் அநீதியாளர்களிடமிருந்து இரட்சிப்பை வழங்குவானாக. அங்கும் நமது நிலைமைகள் சிறந்ததாக ஆகட்டுமாக. சின்னச் சின்ன விஷயங்களுக்காகவும் வழக்குகள் தொடரப்படுகின்றன; நெருக்கடிகள் கொடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஜுமுஆவுக்குப் பிறகு நான் ஜனாஸாவும் தொழ வைப்பேன். அவர்களின் நற்குறிப்பை இப்பொழுது கூறி விடுகின்றேன்.

**முதலாவது குறிப்பு, மதிப்பிற்குரிய குலாம் சர்வர் சாஹிப் ஷஹீத் அவர்களுடையதாகும்.** இவர்கள் மதிப்பிற்குரிய பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்களின் மகன் ஆவார்கள். இவர்கள் மண்டி பஹாவுத்தீன் மாவட்டத்திலுள்ள சஅதுல்லாஹ்பூரைச் சேர்ந்தவர்கள். அஹ்மதியத்தின் எதிரி ஒருவன் ஜூன் 8 ஆம் தேதி இவர்களை ஷஹீதாக்கி விட்டான். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

ஷஹீது மர்ஹூம் அவர்கள் வஸிய்யத் அமைப்பில் இணைந்திருந்தார்கள். ஐவேளைத் தொழுகையை ஜமாஅத்தாக தொழக்கூடியவராகவும், தஹஜ்ஜுதை கடைபிடிக்க கூடியவராகவும் இருந்தார்கள். அதிகமாக தரூது ஷரீஃப் ஓதக் கூடியவராகவும், நஃபில் நோன்புகள் நோற்பவராகவும், திருக்குர்ஆன் ஓதும் பழக்கமுடையவராகவும் இருந்தார்கள். அதுமட்டுமின்றி, ஜமாஅத் நூல்களை வாசிக்கும் பழக்கமுடையவராகவும், தினந்தோறும் சதக்கா கொடுப்பவராகவும், தேவையுடையவர்களுக்கு மறைமுகமாக உதவி செய்யக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். மர்ஹூமுக்கு மிகுந்த தப்லீக் ஆர்வம் இருந்தது. பல நல்ல உள்ளங்கள் இவர்களின் மூலமாக அஹ்மதியத்தில் இணைந்துள்ளன. கடந்த காலத்தில் கலிமா தொடர்பான விவகாரத்தில் இதர மக்களுடன் மூன்று, நான்கு நாட்கள் இறைவழியில்

கைதாகி இருக்கும் நல்வாய்ப்பும் இவர்களுக்கு கிடைத்துள்ளது. மர்ஹூம் அவர்களிடத்தில் கட்டுப்படும் தன்மை நிறைவாகக் காணப்பட்டது.

மர்ஹூம் அவர்கள் தம் பின்னால் மனைவி மற்றும் இரு மகன்களையும், நான்கு மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள்.

**இரண்டாவது குறிப்பு, ராஹத் அஹ்மத் பாஜ்வா சாஹிப் ஷஹீத் அவர்களுடையதாகும்.** இவர்கள் மதிப்பிற்குரிய முஷ்தாக் அஹ்மத் பாஜ்வா சாஹிப் அவர்களின் மகன் ஆவார்கள். இவர்கள் மண்டி பஹாவுத்தீன் மாவட்டத்திலுள்ள சஅதுல்லாஹ்பூரைச் சேர்ந்தவர்கள். இவர்களையும் ஜூன் 8 ஆம் தேதி அதே அஹ்மதியத்தின் எதிரி ஷஹீதாக்கியுள்ளான். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

மர்ஹூம் அவர்களுக்கு கிலாஃபத்துடன் மிக்க நேசம் இருந்தது. விருந்தோம்பல் செய்பவராகவும், இன்முகம் கொண்டவராகவும், எல்லோருடனும் அன்புடன் பழகுபவராகவும், ஜமாஅத் பணிகளில் முன்னணியில் இருப்பவராகவும், துஆவில் ஈடுபட்டிருப்பவராகவும் இருந்தார்கள்.

ஷஹீது மர்ஹூம் அவர்கள் பின்விட்டு சென்றவர்களுள் பெற்றோர், மனைவி மட்டுமின்றி நான்கு மற்றும் ஒன்றரை வயதுடைய இரு மகள்களும் உள்ளனர்.

**மூன்றாவது நற்குறிப்பு, மதிப்பிற்குரிய மலிக் முஸஃப்பர் கான் சாஹிப் ஜோயா அவர்களுடையதாகும்.** இவர்கள் கடந்த நாட்களில் வஃபாத்தாகியிருக்கிறார்கள். இன்னாலில்லாஹி இன்னா இலைஹி ராஜிஊன்.

மர்ஹூம் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார்கள். இவர்களுடைய மகன் முஹம்மது மதீவுல்லாஹ் ஜோயா சாஹிப் அவர்கள் ஜமாஅத்தின் முரப்பியாக ஹவாய் **(Hawaii)** இல் தொண்டாற்றுகிறார்கள். அவர்கள் தந்தையின் ஜனாஸா மற்றும் நல்லடக்கத்தில் கலந்து கொள்ள இயலவில்லை.

மர்ஹூம் அவர்கள் மார்க்கப்பற்று மிக்கவராகவும், இறையச்சம் கொண்டவராகவும், ஏழைகளை பராமரிக்கக் கூடியவராகவும், தஹஜ்ஜுத் தொழக்கூடியவராகவும், ஐவேளை தொழுகைகளை கடைபிடிக்கக் கூடியவராகவும், ஜமாஅத்தின் பொறுப்பாளர்களுக்கு கண்ணியமளிப்பவராகவும், திருக்குர்ஆனை பொருளுடன் ஓதக் கூடியவராகவும், மிகவும் தூய மனிதராகவும் இருந்தார்கள்.

நான் 2005 ஆம் ஆண்டில் வஸிய்யத் குறித்து கவனமூட்டிய போது மர்ஹூம் அவர்கள் ஏற்கனவே மூஸியாக இருந்தார்கள். அப்போது அவர்கள் தமது வஸிய்யத்தை பத்தில் ஒரு பங்கில் இருந்து மூன்றில் ஒரு பங்கு ஆக ஆக்கிவிட்டார்கள். விகிதாச்சாரத்தை அதிகரித்துக் கொண்டார்கள். தாம் எவ்வாறு இந்த திட்டத்தில் பங்கெடுப்பது என்று அவர்கள் செயல்பட்டார்கள். தம் குழந்தைகளிடம், பொருள் தியாகம் மற்றும் சந்தாக்கள் என்பது உண்மையில் மனிதன் முதல் நேரத்திலேயே கொடுப்பதாகும். செகரட்டரி மால் நினைவுபடுத்துவதற்கு வாய்ப்பே கொடுக்கக் கூடாது என்று கூறி வந்தார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அனைத்து மர்ஹூம்களின் பாவமன்னிப்பு, உயர் அந்தஸ்து ஆகியவற்றிற்காக துஆ செய்தார்கள். மேலும், அவர்களின் ஜனாஸா தொழுகையை தொழ வைப்பதாக அறிவித்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ

لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ

وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**